2012 அக்டோபர் 31]

இல்லத்தினை உடனடியாக அமைத்துத் தர வேண்டும் என்று தங்கள் வாயிலாக கேட்டுக்கொண்டு, நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெகுவிரைவில் தொடங்கப்பட வேண்டும் என்று சொன்னார். இந்தத் திட்டம் தொண்டு நிறுவனங்கள் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அரசு உதவியோடு செயல்படக்கூடிய ஒரு திட்டம். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அவர்களது தொகுதியில் உள்ள தொண்டு நிறுவனத்தினர் யாரேனும் ஒருவர் இதனை எடுத்துச் செய்வதற்கு முன்வருவார்களேயானால், அதற்கு நீங்கள் பரிந்துரை செய்தால் உடனடியாக ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

4—

வேளாண் இயந்திரங்கள்

***21496—திரு. என்.ஆர். ரெங்கராஜன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறைமூலம் வாடகைக்கு வழங்கப்படும் டிராக்டர்கள் மற்றும் கதிரடிக்கும் இயந்திரங்களைக் கூடுதலாக வாங்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சை மாவட்டம் விவசாயிகளுக்கு வேளாண் பொறியியல் துறைமூலம் 16 டிராக்டர்கள் மற்றும் 2 கதிரடிக்கும் இயந்திரங்கள் குறைந்த விலையில் வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இதுதவிர தஞ்சை மாவட்டத்திற்கு சம்பா சாகுபடி சிறப்புத் தொகுப்புத் திட்டத்தின்மூலம் மூன்று 65 H.P. டிராக்டர்கள் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, தஞ்சை மாவட்டத்திற்கு டிராக்டர் மற்றும் கதிரடிக்கும் இயந்திரங்கள் கூடுதலாக வாங்கும் பிரேரணை அரசிடம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

திரு. என்.ஆர். ரெங்கராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் என்பது தமிழகத்தினுடைய நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் இடம். அங்கு தனியார்களுடைய கதிரடிக்கும் இயந்திரம், நடவு நடும் இயந்திரம் போன்றவற்றையெல்லாம் எடுத்தோம் என்று சொன்னால் விவசாயிகள் அதிகமான அளவிலே வாடகை கொடுக்க வேண்டியுள்ளது. எனவே, அரசின் சார்பிலே அதிக அளவிலே இயந்திரங்கள் வாங்கவேண்டியது மிக அவசியம். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கதிரடிக்கக்கூடிய இயந்திரம், நடவு நடும் இயந்திரம் போன்றவற்றை வாங்குவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், இப்போது தஞ்சை மாவட்டத்திலே பல்வேறு இடங்களிலே கரும்பு விவசாயத்தையும் செய்து வருகின்றார்கள். எனவே, அதற்கான கருவிகளையும் எதிர்காலத்தில் வாங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு மானியத்திலே விவசாயிகளுக்கு டிராக்டர்கள் 12-ம் மற்றும் நெல் அறுவடை இயந்திரங்கள் 11-ம் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக விவசாயிகளுக்கு மானியத்திலே 5 டிராக்டர்களும், நெல் அறுவடை இயந்திரங்கள் 10-ம் வழங்க இருக்கிறோம். விவசாயிகள் இதனை நல்ல முறையிலே பயன்படுத்திக்கொள்ளலாம். தேவையிருப்பின் அதுபற்றி

2012 அக்டோபர் 31]

பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான குடந்தை, விவசாயம் நிறைந்த பகுதி. எனவே, அந்தப் பகுதி விவசாயிகளுக்கு கரும்பு வெட்டும் இயந்திரமும், அதுபோல கதிரடிக்கும் இயந்திரமும், நடவு நடும் இயந்திரமும், உழவடிக்கும் டிராக்டர்களும் கூடுதலாக வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக 5 டிராக்டர்களும், 10 நெல் அறுவடை இயந்திரங்களும் வாங்க இருக்கின்றோம். அப்படி வாங்கும்போது உறுப்பினர் அவர்கள் சொல்லிய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

5—

வன உரிமைக் குழுக்கள்

***7903—திரு. கே. தங்கவேல்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வனக் கோட்டத்தில் மலைவாழ் மக்கள் குடியிருப்புகளில் வன உரிமைக் குழுக்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS